**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 99/2019 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | :LW1/ PW-8 | Village: |
| Name | : கார்த்திகேயன், | Age : |
| அஞ்சலக கண்காணிப்பாளர், கும்பகோணம் | | Taluk : |
| Father's/Husband's Name | : | |
| | | Religion |
| Nationality | : Indian | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 08/07/2022**

சாட்சியை திருநீலக்குடி காவல் உதவி ஆய்வாளர் திரு.ரவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது கும்பகோணம் அஞ்சல் அலுவலகத்தில் கோட்ட கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். பாலசுப்ரமணியன், த/பெ. வேணுகோபால் என்பவர் கடந்த 29/09/1989 ல் இருந்து சாத்தனூர் கிளை அஞ்சல் அலுவலகத்தில் கிளை அஞ்சலக அதிகாரியாக பணிபுரிந்து வந்தார். கடந்த 28/05/2006 அன்று கிளை அஞ்சலக அலுவலகத்தை திறக்காமல் தலைமறைவாகி விட்டார். அது குறித்து நரசிங்கம்பேட்டை துணை அஞ்சலக அதிகாரியிடமிருந்து புகார் வரப்பெற்றது. அதன் பேரில் பாலசுப்ரமணியனின் அண்ணனிடம் கிளை அஞ்சலகத்தின் சாவியை பெற்று அஞ்சலகத்தை திறந்து பரிசோதனை செய்ததில், கிளை அஞ்சல் அலுவலகத்தில் பணம் குறைவாக இருந்தது. எனவே அது குறித்து அப்போது குத்தாலம் உபகோட்ட அஞ்சலக

ஆய்வாளராக பணியில் இருந்த சங்கர் என்பவர் விசாரணை செய்து, கும்பகோணம் கோட்ட அலுவலகத்திற்கு அறிக்கை அளித்துள்ளார். நான் கடந்த 10/02/2011 ம் தேதி தான் குத்தாலம் உபகோட்ட அஞ்சலக ஆய்வாளராக பொறுப்பேற்று கொண்ட பிறகு, மேற்படி பதிவேடுகளை பார்வையிட்டதில், அதில் வள்ளி, சங்கர், ரமணி, மல்லிகா, மங்கையற்கரசி, லட்சுமி ஆகிய 6 பேரிடமிருந்து பணம் பெற்று அவர்களது அஞ்சலக சேமிப்பு கணக்கு புத்தகத்தில் அதனை பதிவு செய்து கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அலுவலக பதிவேடுகளில் மேற்படி பணம் பற்றிய விவரம் பதிவு செய்யப்படவில்லை. மேற்படி சேமிப்பு கணக்குகளில் முறையீடு செய்ததன் மூலமாக ரூ 11,530/- பாலசுப்ரமணியம் என்பவரால் கையாடல் செய்யப்பட்டிருந்தது. அது சம்மந்தமாக திருநீலக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். மேற்படி 6 நபர்களின் அஞ்சலக சேமிப்பு கணக்கு புத்தகங்களின் நகல்களையும், மேற்படி 6 நபர்களின் வாக்குமூலங்கள், அஞ்சல் அலுவலக கணக்கு பதிவேடுகளையும் போலிசாரிடம் ஒப்படைத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் அவரது வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**